**குருவிட பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 26 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுலை 14 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3.1 மற்றும் 1.3.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குருவிட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திண்மக் கழிவுப் பொருள் செயற்திட்டத்திற்காக புஸ்ஸெல்ல தோட்டத்தில் ரூபா 3,500,000 தொகைப் பணத்திற்கு கொள்வனவு செய்திருந்த காணியின் பெறுமதியினை 209 மூலதன செலவுத் தலைப்புக்க வரவு வைத்து காசுக் கணக்கு செலவு வைத்தல் தவிர அதற்கு மேல் சொத்துக்கள் அதிகரித்தல் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கிற்கு சீராக்கல் செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது வீதவரி மற்றும் ஏக்கர் வரிக்காக முறையே ரூபா 42,987 மற்றும் ரூபா 390 தொகை என ரூபா 43,377 வழங்கிய கழிவுத் தொகையை ஆண்டிற்கான செலவுகளுடன் சீராக்கல் செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு ஆகிய வெளிப் பொறுப்புக்கள் முறையே ரூபா 36,201 தொகை மற்றும் ரூபா 63,528 தொகை என கூட்டுத்தொகை ரூபா 99,729 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) செலவு விடயம் 108 மற்றும் 203 தொடர்பான செலவுப் பதிவேடு மற்றும் கணக்குகளிடையே ரூபா 20,000 மற்றும் ரூபா 405,979 தொகைகள் ஆக ரூபா 425,979 இற்கான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது நன்கொடைகளாகக் கிடைத்திருந்த மோட்டார் வாகனங்கள், பொறியும் பொறித்தொகுதிகள், இயந்திர உபகரணங்கள், நூலகப் புத்தகங்கள் மற்றும் தளபாடங்கள் பொருத்துதல் என்பன மூலதன செலவீட்டிற்கான உதவி நிதி மூலம் பங்களிப்பு கணக்கிற்கு பதியப்படாமல் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக மாகாண சபையில் இருந்து மற்றும் மத்திய அரசில் இருந்து கிடைத்திருந்த மூலதன உதவி ரூபா 94,780,915 தொகையினை மூலதன உதவியாக கணக்கீடு செய்திருந்த போதிலும், அச் செலவுகள் மூலதன சொத்துக்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவுத் தலைப்புகளின் கீழ் வருமான செலவு என கணக்கீடு செய்திருந்தமையால் நிதி மற்றும் செயற்பாட்டு கூற்றில் பாரிய செயற்பாட்டு பற்றாக்குறை ஒன்று சுட்டிக்காட்டியிருந்தது.

(எ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமுல் நடத்தப்பட்டிருந்த கிராமங்களிடையிலான செயற்திட்டத்துடன் தொடர்புடைய ரூபா 2,471,752 தொகை மற்றும் அச் செயற்திட்டத்துடன் தொடர்புடைய முன்னைய பல வருடங்களில் நிலையான வைப்பு என முதலீடு செய்யப்பட்ட தொகையுடன் தொடர்புடைய ரூபா 1,726,001 தொகையுடன் மொத்தம் ரூபா 4,197,753 தொகையொன்று மீளாய்வாண்டின் போது மூலதன வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

3 கணக்கு விடயங்கள் தொடர்பான மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காணப்படும் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் காணப்படும் மீதிகளிடையே ரூபா 22,299,125 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகளுக்கு மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாண இலக்கம் 371 | 2010 பெப்ரவரி மாதத்தில் அப்போது இருந்த தலைவருக்கு தாய்லாந்து கல்விச் சுற்றுலா ஒன்றிற்கு வழங்கியிருந்த ரூபா 100,000 இற்கான முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாண இலக்கம் 371(2) | குறிப்பிட்ட ஒரு விடயத்திற்காக கட்டுநிதி வழங்கப்படும் போது ரூபா 20,000 தொகையினை மிகைக்கக் கூடாதெனவும், பிரதேச சபையினால் மேற்கூறிய பிரமாணங்களுக்கு முரணாக முற்பணத் தொகையாக 2 சந்தர்ப்பங்களின் ரூபா 379,789 தொகை வழங்கியிருந்தது. |

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப் பிரமாண இலக்கம் 371(2)(ஈ) | மேற்கூறிய பிரமாணங்களின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கருமம் முடிவடைந்தவுடனேயே தீர்க்கப்பட வேண்டுமெனினும் 2009, 2010 மற்றும் 2014 ஆண்டுகளுக்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா 1,144,135 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப் பிரமாண இலக்கம் 570 மற்றும் 571 | மேற்கூறிய பிரமாணங்களின் பிரகாரம் ரூபா 1,315,319 இற்கான வைப்புக்களை ஆதனவளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 88,158,178 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 17,172,231 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாட்டு மிகை ரூபா 70,985,947 இனால் அதிகரித்திருந்ததுடன் அது முன்னைய ஆண்டை விட 413 சதவீதத்தினால் அதிகரிப்பு ஒன்றென அவதானிக்கப்பட்டது. அதற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் சம்பளங்கள் மற்றும் படிகள் 26 சதவீதத்தினால் அதிகரித்தல் மூலதன பழுதுபார்த்தல் செலவுகளில் 390 சதவீத அதிகரிப்புமே பிரதானமாக பாதித்துள்ளது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி மற்றும் வரி | 2,006 | 2,769 | 4,423 |
| வாடகை | 5,549 | 5,772 | 5,677 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,086 | 1,659 | - |
| ஏனைய வருமானங்கள் | 49,545 | 50,343 | 17,129 |

#### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் இணக்கஞ் செய்யும் போது சேவைக்கான கட்டணம் எனும் வருமான விடயத்தில் சேகரிக்கப்பட்ட வருமான பாதீட்டு தொகையை விட 24 சதவீதம் குறைவடைதல் ஒன்றினை காட்டியது.

### 2.3.3 வீத வரி

2015 ஜூன் 30 திகதி வரை ரூபா 17,184,751 இற்கான நிலுவை வீதவரி மீதியொன்றும், ரூபா 2,114,488 இற்கான நிலுவை ஏக்கர் வரி மீதியொன்றும் காணப்பட்டதுடன், அந்த நிலுவை வரி மீதிகள் கணக்காய்வுத் திகதியாகிய 2015 அக்தோபர் 12 திகதி வரை அறவீடு செய்வதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. வீத வரியில் 33 சதவீதம் 04 வருடங்களை விட மிகையான நிலுவை மீதியாக இருந்ததுடன், ஏக்கர் வரியில் 35 சதவீதம் 03 வருடங்களை விட மிகையான நிலுவை மீதி ஒன்றென அவதானிக்கப்பட்டது.

### 2.3.4 வாடகை

பிரதேசத்தில் காணப்படும் கைத்தொழில் வியாபாரங்கள் பற்றிய கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் அனைத்து வியாபாரிகள் மற்றும் கைத்தொழில்களில் குறிப்பிட்ட வரித்தொகைகள் அறவிடப்பட்டனவா என்பது தொடர்பாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் சபைக்கு கிடைத்திருந்த வருமானத்தை மாத்திரம் பதிவு செய்திருந்ததென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.3.5 ஏனைய வருமானங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 வருட காலத்தை மிகைத்துள்ள பொதுச் சந்தையின் இலக்கம் 17, 23, 24, 27 மற்றும் 28 ஆகிய கடைகளில் இருந்து நிலுவை வாடகையும் நிலுவை மிகைக் கட்டணமாக ரூபா 4,436,000 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அக் கடைகள் 2014 ஜூலை 30 முத்திரை வைத்து பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த கடைகளின் நிலுவை வாடகை மற்றும் கடை வாடகையாளர்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஆண்டிற்கான அறவிடப்படாத ரூபா 116,850 தொகைக்கான விளம்பர அறிவித்தல் கட்டணம் அவீடு செய்வதற்காக கணக்காய்வுத் திகதியாகிய 2015 அக்தோபர் 12 திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் அறிவித்தல் வகைகளை இனங்கண்டு வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கட்டணம் அறவீடு செய்து வருமானத்தை அதிகரிப்பதற்காக முறையான நிகழ்ச்சித் திட்டமொன்று கடைபிடித்திருக்கவில்லை. கணக்காய்வுத் திகதியாகிய 2015 அக்தோபர் 12 திகதி வரை 07 நிறுவனங்களில் இருந்து ரூபா 87,789 இற்கான வருமானமொன்று கிடைத்திருந்ததுடன் தனியார் விளம்பர நிறுவனமொன்றில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 113,832 தொகையில் இருந்து ரூபா 63,054 அறவிடப்பட்டிருந்தது. 04 நிறவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 71,604 விளம்பர அறிவித்தல் கட்டணத்தை அறவீடு செய்தல் தொடர்பாக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேறகொள்ளப்படுகின்றது.

(அ) 2014 திசெம்பர் முதல் மீளாய்வாண்டு இறுதி வரை பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தினை இனங்கண்டு அதனை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) இரத்தினபுரி காணி பதிவாளர் அலுவலகத்தில் இருந்து மீளாய்வாண்டின் ஜனவரி முதல் திசெம்பர் வரை பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்தை இனங்கண்டு அப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், ஹொரண காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து 2014 அக்தோபர் முதல் 2015 ஜனவரி வரை பெற வேண்டிய ரூபா 510,600 இற்கான முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அவிசாவளை காணிப் பதிவாளர் அலுவலர் மீளாய்வாண்டின் ஜூலை முதல் மீளாய்வாண்டு திசெம்பர் வரை பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்தை இனங்கண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

2012 அக்தோபர் 15 ஆம் திகதி குருவிட நகர அபிவிருத்தியின் காரணமாக அகற்றப்பட்ட பொதுச் சந்தையின் 02 கடைகள் தொடர்பாக ரூபா 2,602,897 இற்கான நிலுவை கடை வாடகை மற்றும் 2013 மே 10 ஆந் திகதி முத்திரையிடப்பட்ட பொதுச் சந்தையின் 04 கடைகள் தொடர்பாக ரூபா 2,112,597 இற்கான நிலுவைக் கடை வாடகை தொடர்பாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்த போதிலும், 2015 அக்தோபர் மாதம் வரை அந்த வழக்குகள் தொடர்பாக ரூபா 78,915 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3.2 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009, 2010, 2014 மற்றும் 2015 ஆண்டுகள் தொடர்பாக சபையின் பதவியணி, தலைவர் உட்பட மந்திரமார் பங்குபற்றிய கல்வி மற்றும் உல்லாச பிரயாணத்திற்கு 04 சந்தர்ப்பங்களில் ரூபா 539,789 தொகை செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ் உல்லாச பிரயாணம் தொடர்பாக பெற்றிருந்த அங்கீகாரம் அல்லது பிரதேச சபையின் பணத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான விடயங்களுக்கு நிதியேற்பாடு ஒதுக்குதல் போலவே குறிப்பிட்ட பிரயாணத்தின் மூலம் பெற்றுள்ள பயன்கள் போன்ற தகவல்கள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும், குறிப்பிட்ட உல்லாசப் பிரயாண மற்றும் கல்விச் சுற்றுலாவிற்காக பெற்றிருந்த முற்பணம் ரூபா 538,789 தொகையினை தீர்ப்பதற்கும் 2016 மே மாதம் வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு மே 15 ஆம் திகதி சபையின் பதவிக்காலம் முடிவடைந்திருந்ததுடன் மந்திரிமார் படியாக இரண்டு மந்திரிமாருக்கு ரூபா 15,000 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

2015 மே 11 திகதி குருவிட வர்த்தக தொடர் கட்டிடத்தின் (Hyper) நிர்மாண வேலைகளுக்காக ரூபா 2,357,232 இற்கான முற்பணம் ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. நீதிமன்ற கட்டளையின் காரணமாக ஒப்பந்தக்காரர் நிர்மாணவேலையை இடையில் நிறுத்தியிருந்தார்.

## 04. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்படுத்தியிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டு அதற்கு தேவையான வசதிகளை வழங்கி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல் நடத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) ஒப்பந்த நிருவாகம்